# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109755

1. District மாவட்டம் : திருச்சிராப்பள்ளி | PS: காவல்நிலையம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 08 | Date: நாள் 04.07.2022

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (as amended in 2018). — Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 04.07.2022 — Date to : நாள் வரை 04.07.2022
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 13.00 Hrs — Time to : நேரம் வரை 18.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.07.2022 — Time நேரம் : 23.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.07.2022 — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 4 கி.மீ வடமேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — செயற் பொறியாளர் அலுவலகம், ஆற்று பாதுகாப்பு கோட்டம், நீர்வள ஆதாரத்துறை திருச்சி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : R.K. ரமேஷ் — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : குப்புசாமி
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 01.11.1972 — (d) Nationality நாட்டினம் : Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர் — (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) R. மணிமோகன் EE, WRD, திருச்சி.
2) K. ஜெயராமன் AEE, WRD, திருச்சி.
3) S.N.K. கந்தசாமி AE, RC Section, WRD, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.R. 4.7.22 K.Ramesh Dy.ICO Trichy

G. [signature] 4.7.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

04.07.2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.சித்திரவேல்
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்
ஊ.த.கு. பிரிவு
திருச்சி

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2022–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான், இன்று (04.07.2022) இரவு 23.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ரமேஷ், த/பெ.குட்டியப்பன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரக வளாகம், திருச்சி என்பவர் என் முன்பாக ஆஜராகி தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தில் 04.07.2022ந்தேதி நடத்தப்பட்ட திடீர்சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டி 04.07.2022 ஆம் தேதியிட்ட புகார் கடிதம் கொடுத்தார். மேற்படி புகார் கடிதம் மற்றும் திடீர்சோதனை செயல்முறைகள் பின்வருமாறு. அனுப்புநர் கு.ரமேஷ், வயது 49/2022, த/பெ குட்டியப்பன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரக வளாகம், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திருச்சிராப்பள்ளி. ஐயா, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறற இரகசிய தகவலின்பேரில், 04.07.2022–ம தேதி பிற்பகல் சுமார் 11.00 மணியளவில் எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு வந்து காவல் ஆய்வாளர் திரு.G.சக்திவேல் அவர்களை சந்தித்தேன். தகவலின்பேரில் அச்சமயம் திருச்சி மேற்கு, மண்டல துணை வட்டாட்சியர் திரு.தங்கராஜ் என்பவரும் அங்கு வந்திருந்தார். உடன் காவல் ஆய்வாளர் திரு.G.சக்திவேல் மற்றும் விஜிலன்ஸ் குழுவினருடன் நானும், தங்கராஜும் மதியம் 12.30 மணியளவில் விஜிலன்ஸ் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மதியம் சுமார் 13.00 மணிக்கு திருச்சி பீமநகர் சாலையில், அமைந்துள்ள தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தை அடைந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த சோதனையின்போது தரைதளத்தில் உள்ள உதவி பொறியாளர் திரு.கந்தசாமி அமர்ந்திருந்த இருக்கைக்கு இடதுபுறத்தில் தரையில் கருநீல நிற W welldone என்ற அடையாளமுள்ள Shoulder Bag ஒன்று இருந்தது. மேற்படி கருநீல நிற W welldone என்ற பேக்கினை நான் சாட்சி முன்னிலையில் திறந்து பார்க்க, அதில் கட்டுக்கட்டாக 2000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகட்டுகள் இருந்தன. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதனுள் 228 எண்ணிக்கையிலான 2000 ரூபாய் நோட்டுகளும், 5340 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்கட்டுகளும், ஒரு 100 ரூபாய் நோட்டும், இரண்டு எண்ணிக்கையிலான 50 ரூபாயும்,

மூன்று எண்ணிக்கையிலான 20 ரூபாய் நோட்டுகளும் மற்றும் நான்கு எண்ணிக்கையிலான 10 ரூபாய் நோட்டுகளும் ஆக மொத்தம் **ரூ.31,26,300/–**(ரூபாய் முப்பத்தியொன்று இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து முன்னூறு மட்டும்) **இருந்தது.** அப்பணம் பற்றி உதவி பொறியாளர் கந்தசாமியிடம் நான் கேட்க, இந்த பணம் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், குளித்தலை RC Sub-division பொறியாளர்களிடமிருந்தும் பெறப்பட்டது எனவும், இதில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்கள் சொன்னதின் பேரில் **ரூ.5,00,000/–** மட்டும் தனக்கு எதிரில் அமர்ந்துள்ள திரு.A.சக்திவேல் என்பவருக்கு அவரது புகார்மனு மீது நடவடிக்கை கைவிட கொடுப்பதற்காகவும், மீதமுள்ள பணம் தனக்கும் தனது உயரதிகாரியான செயற்பொறியாளர் திரு.R.மணிமோகன் மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.K.ஜெயராமன் ஆகியோருக்கும் கொடுக்க வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி பணமானது கையூட்டு பணமாக இருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் மேற்படி **ரூ.31,26,300/–**த்துடன் கருநீல நிற W welldone என்ற Shoulder பேக்கையும் மேல்விசாரணைக்காக மகஜரில் ஆய்வாளர் திரு.G.சக்திவேல் அவர்களால் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனை தொடர்பாக திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. திரு.R.மணிமோகன், செயற்பொறியாளர் மற்றும் திரு.கந்தசாமி, உதவி பொறியாளர் இருவரிடமும் வேறு தொகைகள் எதுவும் தங்களிடம் உள்ளதா என நான் திடீர்சோதனையின்போது கேட்க, செயற்பொறியாளர் திரு.மணிமோகன் தான் No.27, Raja Colony, 1st Main Road, Trichy என்ற விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், வீட்டில் உள்ள லஞ்சப்பணம் பற்றி நான் அவரிடம் கேட்க, வீட்டிற்கு சென்றால்தான் எவ்வளவு பணம் உள்ளது என்பதை உறுதியாக கூறமுடியும் எனவும் தெரிவித்தார். உதவி பொறியாளர் திரு.கந்தசாமி தான் D/E2, Sankar Abords, Laxmi Vasam-2, Kallanai Road, Thiruvanaikovil, Srirangam, Trichy-5 என்ற விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், அங்குள்ள லஞ்சப்பணம் பற்றி நான் அவரிடம் கேட்க, வீட்டிற்கு சென்றால்தான் எவ்வளவு பணம் உள்ளது என்பதை உறுதியாக கூறமுடியும் எனவும் தெரிவித்தார். உடன் காவல் ஆய்வாளரால் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு, சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கு முன்தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை சம்மந்தமான மகஜர் பிற்பகல் **13.15** தொடங்கி மாலை **18.00** மணிக்கு முடிக்கப்பட்டது. பிறகு அங்கிருந்து புறப்பட்டு, மேற்படி திரு.மணிமோகன் என்பவரின் இருப்பிடமான No.27, Raja Colony, 1st Main Road, Trichy என்ற முகவரியை மாலை **18.45** மணிக்கு அடைந்து, வீடு சோதனை செய்யப்பட்டது. சோதனையின்போது அந்த வீட்டில் ஒரு அறையிலிருந்த இருந்த Wardrobeலிருந்து பணம் **ரூ.4,00,000/–** (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) **இருந்தது.** அப்பணம் பற்றி திரு.மணிமோகனிடம் நான் கேட்க, அவர் சரியான

முகாந்திரம் அளிக்காததால் மேற்படி பணம் ரூ.4,00,000/—த்தை மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் திரு.G.சக்திவேல் அவர்களால் கைப்பற்றப்பட்டது. வீடு சோதனையில் கண்டறியப்பட்ட விபரங்கள் குறித்து வீடு சோதனை ஜாபிதா மாலை 18.45 மணி முதல் 19.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. பின் அங்கிருந்து நானும், திரு.தங்கராஜும், காவல் ஆய்வாளர் உள்ளிட்ட விஜிலன்ஸ் குழுவினரும் புறப்பட்டு, தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்ட உதவி பொறியாளர் திரு.கந்தசாமி என்பவரின் இருப்பிடமான D/E2, Sankar Abords, Laxmi Vasam-2, Kallanai Road, Thiruvanaikovil, Srirangam, Trichy-5 என்பவரின் வீட்டை மாலை 20.00 மணிக்கு அடைந்து 20.30 மணிவரை வீடு சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. வீடு சோதனை தொடர்பான விபரங்கள், சோதனை ஜாபிதாவில் குறிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கைகள் அனைத்திலும், என்னுடன் சாட்சியாக மண்டல துணை வட்டாட்சியர் திரு.தங்கராஜ் உடன் இருந்தார். திரு.A.சக்திவேல், த/பெ.அய்யாவு, குறிச்சி கிராமம் அம்பேத்கார்நகர், குளித்தலை, கரூர் மாவட்டம் என்பவர் குளித்தலை கட்டளை மேட்டு வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளில் முறைகேடு நடந்ததாக அனுப்பிய புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளில் தங்களுக்கு சாதகமாக எழுதிக்கொடுக்க வேண்டி, மேற்படி திரு.A.சக்திவேலுக்கு கையூட்டு பணம் கொடுக்க வேண்டும் என்று கூறி, நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தில் பணிபுரியும் EE, திரு.மணிமோகன், AEE திரு.K.ஜெயராமன் மற்றும் AE திரு.கந்தசாமி ஆகியோர் குளித்தலை உபகோட்டம் WRD உட்கோட்டத்தில் பணிபுரியும் அரசு பொறியாளர்களிடமிருந்தும், அரசு ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கையூட்டு பணம் வசூல் செய்தும், அந்த பணத்தை தங்களுக்குள் பிரித்துக்கொள்வதற்காகவும், கையூட்டு பணம் கேட்டுப்பெற்று வைத்திருந்ததாக தெரிகிறது, மேற்படி திடீர் சோதனை செயல்முறைகள் இத்துடன் இணைத்து மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், திடீர் சோதனையின்போது பணம் எதுவும் வாங்காமல் இருந்த திரு.A.சக்திவேல் கொடுத்த வாக்குமூலத்தையும், திரு.மணிமோகன், செயற்பொறியாளர், திரு.கந்தசாமி, உதவி பொறியாளர் ஆகியோர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்ததையும், தங்களிடம் மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, மேற்படி திடீர் சோதனையின் செயல்முறைகளின்படி கையூட்டு பணம் வைத்திருந்த சம்மந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, Sd.xxx(K.Ramesh 04.7.2022).' <u>Submitted to the Court of the Hon'ble Special Judge, for the PC Act 1988 Cases Trichy</u>:- Received this report at 23.00 hrs on 04.07.2022 and registered a case in Trichy V&AC Cr.No.8/2022 u/s 7,7(A)

of the PC Act 1988(as amended in 2018) at 23.30 hrs on 04.07.2022. Sd.xxx (G.SAKTHIVEL) 04/7/22 Inspector of Police, V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) இன்று 04.07.2022 பிற்பகல் 13.15 மணிக்கு திருச்சி பீமநகர் சாலையில், அமைந்துள்ள தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தை திரு.கு.ரமேஷ், த/பெ.குட்டியப்பன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருச்சி மற்றும் திரு.தங்கராஜ், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு மற்றும் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.சக்திவேல் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர்களின் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர்.

திருச்சி பீமநகர் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தில், திரு.சக்திவேல், த/பெ.அய்யாவு, குறிச்சி கிராமம் அம்பேத்கார்நகர், குளித்தலை, கரூர் மாவட்டம் என்பவர் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னைக்கு அனுப்பிய புகார்மனு, திருச்சி, ஆற்று பாதுகாப்பு கோட்டம், நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளரிடம் விசாரணைக்காக அனுப்பப்பட்டு, மேற்படி புகார்மனு தொடர்பாக புகார்தாரர் திரு.A.சக்திவேலை, செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரச்சொல்லி, மேற்படி புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளில் தங்களுக்கு சாதகமாக எழுதிக்கொடுக்க WRD செயற்பொறியாளர் அவர்கள், குளித்தலை உபகோட்டம் WRD உட்கோட்ட அரசு பொறியாளர்களிடமிருந்தும், அரசு ஒப்பந்ததாரரிகளிடமிருந்தும் கையூட்டு பணம் வசூல் செய்து புகார்தாரர் சக்திவேலுக்கு கொடுக்கவுள்ளதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், இன்று 04.07.2022 திருச்சிமாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்திற்க்கு தெரிவித்த தகவலின்பேரில், 12.000 மணிக்கு வந்த துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரமேஷ் மற்றும் வேண்டுகோளின்படி வந்த திரு.தங்கராஜ் மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு வட்டம் ஆகியோருடன் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து பிற்பகல் 12.30 மணிக்கு புறப்பட்டு, பிற்பகல் சுமார் 13.00 மணிக்கு கூஷ திருச்சி நீர்வள ஆதாரத்துறை அலுவலகத்தை அடைந்து முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூஷ தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தில் முன்பக்க பிரதான வாசல் வழியே உள்ளே நுழைந்ததும் நீண்ட வராண்டாவும், வராண்டாவின் மேற்கு பக்கம் உதவி பொறியாளர் அலுவலகமும், கிழக்கு பக்கம் உதவி செயற்பொறியாளர் அலுவலகமும் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் கிழக்கு பக்கம்

செயற்பொறியாளர் அறை தெற்கு பார்த்தும் அமைந்துள்ளது. செயற்பொறியாளர் அறைக்கு அடுத்து கணக்கு பிரிவும் உள்ளது. முதல் தளத்ததிற்கு செல்லும் படிக்கட்டின் பக்கவாட்டில் வரவேற்பு மேஜை இருந்தது. மேற்படி அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள உதவி பொறியாளர் அறை கண்ணாடி தடுப்பினால் தடுக்கப்பட்டிருந்தது, மேலும் அந்த அறையில் மர தடுப்பினால் தடுக்கப்பட்டு, மூன்று அறைகளாக இருந்தது. அதன் முதல் அறையில் மூன்று நபர்கள் அமர்ந்திருந்தனர், அடுத்த அறையில் ஒருவர் அமர்ந்திருந்தார், உதவி பொறியாளர் அறையில் இரண்டு நபர்கள் அமர்ந்திருந்தனர். மேற்படி நபர்களிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்தின் உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அறைகளில் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. உதவி பொறியாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், அரசு சாட்சி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது.

உதவி பொறியாளர் அலுவலகத்தின் முதல் அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் மோகன்ராஜ், த/பெ.கணேசன் என்றும் தான் உதவி பொறியாளர் அலுவலகத்தில் Site Supervisor(NMR) ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார், மேலும் அவர் அருகில நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தன் பெயர் நந்தினி, த/பெ.சிவக்குமார் என்றும் தான் உதவி பொறியாளர் அலுவலகத்தில் Technical Assistant ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார், மேலும் அவர் அருகிலிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தன் பெயர் அய்யப்பன், த/பெ.பரமசிவம் என்றும் தான் உதவி பொறியாளர் அலுவலகத்தில் Technical Assistant ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார், மேற்படி அலுவலகத்தின் மற்றொரு அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன் பெயர் கிரண், த/பெ.வீரமணி என்றும் தான் உதவி பொறியாளர் அலுவலகத்தில் Technical Assistant ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார், மேலும், மேற்படி அறையின் வட மூலையில் உள்ள உதவி பொறியாளர் அறையில் இருந்த நபர்களை விசாரிக்க அவர்களில் ஒருவர் தன்பெயர் கந்தசாமி, த/பெ.வெங்கிட்டான் என்றும் தான் தமிழ்நாடு அரசு நீர்வள ஆதாரத்துறை, செயற்பொறியாளர் அலுவலகம், ஆற்றுபாதுகாப்பு கோட்டத்தில் உதவி பொறியாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார்கள், அவர்கள் மூவரது அமர்ந்திருந்த இடங்களை சோதனை செய்ய பணம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. அவர்களிடம் வேறு ஏதேனும் பணம் உள்ளதாயென துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்க அவர்கள் அனைவரும் ஆஜர் செய்த தொகைகள், சொற்பதொகைகளாக இருந்ததால், அவர்களிடமே துணை

ஆய்வுக்குழு அலுவலர் ஒப்படைத்தார். மேலும் அவரின் எதிரே அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன் பெயர் சக்திவேல், த/பெ.அய்யாவு, குறிச்சி கிராமம் அம்பேத்கார்நகர், குளித்தலை, கரூர் மாவட்டம் என்றும், தான் கரூர் மாவட்டம், குளித்தலை பொதுப்பணித்துறை ஆற்று பாசான உட்கோட்ட அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படும், கட்டளை மேட்டு வாய்க்கால் புனரமைப்பு பணியில் முறைகேடு நடந்ததாக குறிப்பிட்டு ஒரு புகார் மனுவை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அந்த மனு சென்னை லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திலிருந்து சம்மந்தப்பட்ட துறை அதிகாரிக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தி அனுப்பப்பட்டதாகவும், அதன்படி EE, WRD அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரச்சொல்லி தன்னை அழைத்ததன் பேரில், தான் விசாரணைக்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி உதவி பொறியாளர் இருக்கைக்கு எதிர்புறமுள்ள மேஜையின் வலதுபுறம் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது, மேற்படி இடத்தை சோதனை செய்ய உதவி பொறியாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு இடதுபுறத்தில் தரையில் கருநீல நிற W welldone என்ற அடையாளமுள்ள Shoulder Bagம், ஒன்றும் இருந்தது. மேற்படி கருநீல நிற W welldone என்ற பேக்கினை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திறந்து பார்க்க அதில் கட்டுக்கட்டாக 2000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகட்டுகள் இருந்தன. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதனுள் 228 எண்ணிக்கையிலான 2000 ரூபாய் நோட்டுகளும், 5340 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்கட்டுகளும், ஒரு 100 ரூபாய் நோட்டும், இரண்டு எண்ணிக்கையிலான 50 ரூபாயும், மூன்று எண்ணிக்கையிலான 20 ரூபாய் நோட்டுகளும் மற்றும் நான்கு எண்ணிக்கையிலான 10 ரூபாய் நோட்டுகளும் ஆக மொத்தம் ரூ.31,26,300/– (ரூபாய் முப்பத்தியொன்று இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து முன்னூறு மட்டும்) இருந்தது. அப்பணம் பற்றி உதவி பொறியாளர் கந்தசாமியிடம் கேட்க, இந்த பணம் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், குளித்தலை RC Sub-division பொறியாளர்களிடமிருந்தும் பெறப்பட்டது எனவும், இதில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்கள் சொன்னதின் பேரில் ரூ.5,00,000/–ம் தனக்கு எதிரில் அமர்ந்துள்ள திரு.A.சக்திவேல் என்பவருக்கு அவரது புகார்மனு மீது நடவடிக்கை கைவிட கொடுப்பதற்காகவும், மீதமுள்ள பணம் எனக்கும் எனது உயரதிகாரியான செயற்பொறியாளர் திரு.R.மணிமோகன் மற்றும் உதவி செயற்பொறியாளர் திரு.K.ஜெயராமன் ஆகியோருக்கும் கொடுக்க வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி பணமானது கையூட்டு பணமாக இருக்கலாம் என மேற்படி ரூ.31,26,300/--த்துடன் கருநீல நிற W welldone என்ற Shoulder பேக்கையும் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், உதவி பொறியாளர் கந்தசாமியிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என்று மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரமேஷ் அவர்கள்

கேட்க, அவர் தன்னிடமிருந்த ரூ.1,500/—ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க அது தன் சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்பணம் ரூ.1,500/ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரிடம் அவரது குடியிருப்பு பற்றி கேட்க, அவர் D/E2, Sankar Abords, Laxmi Vasam-2, Kallanai Road, Thiruvanaikovil, Srirangam, Trichy-5 விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், அங்குள்ள லஞ்சப்பணம் பற்றி கேட்க, வீட்டிற்கு சென்றால்தான் எவ்வளவு பணம் உள்ளது என்பதை உறுதியாக கூறமுடியும் என்று உதவி பொறியாளர் தெரிவித்தார். விசாரணைக்கு வந்த திரு.A.சக்திவேல் தொடர்பான ஆவணங்களை உதவிப்பொறியாளர் திரு.கந்தசாமியிடம் கேட்க 1)செயற்பொறியாளர் அலுவலகம் நீர்வளத்துறை, ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி அலுவலக மே.கு.கடித எண்.967/வ2/கோ./2022, நாள்.07.06.2022ல் க.எண்.692/கோ.7/உ.செபொ(தி)/2022, நாள். .6.2022 என மேற்குறிப்பு செய்யப்பட்ட கடிதத்தின் நகல் (A.சக்திவேல், த/பெ.அய்யாவு என்பவாது 10.05.2022 நாளிட்ட புகார் மனுவுடன் அடங்கியது--12 பக்கங்கள்), 2)அ.சக்திவேல், த.பெ.அய்யாவு, குறிச்சி, டாக்டர் அம்பேத்கர் நகர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவரின் அனுப்புதல் முகவரியிட்ட அவரது புகார் மனு நாள்.09.05.2022 மீது மேல்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, திருச்சி மண்டலம் அவர்களுக்கு குறிப்பிட்டு AEஆல் தயார்செய்யப்பட்ட கையொப்பமிடாத கடிதம்(2பக்கங்கள்), 3)Measurement Book No.12374 பக்கம் 83 வரை பதிவுகள் உள்ளது, 4) Measurement Book No.12174 பக்கம் 13 வரை பதிவுகள் உள்ளது, 5) Measurement Book No.12245 பக்கம் 8 வரை பதிவுகள் மற்றும் 6) Measurement Book No.12164 பக்கம் 90 வரை பதிவுகள் உள்ளதை எடுத்து உதவி பொறியாளர் கந்தசாமி ஆஜர் செய்ததை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் குழுவினருடன் முதல் தளத்திற்கு மாடிப்படியின் இடதுபுறம் அதாவது கிழக்கு பக்கத்தில் தெற்கு பார்த்து உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் அறையின் நடுவில் கிழக்கு பார்த்து ஒரு நபர் அமர்ந்திருந்தார், அவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரணை செய்ய அவர் தனது பெயர் R.மணிமோகன் என்றும் தான் செயற்பொறியாளர் RC division, நீர்வளத்துறை ஆற்று பாசன கோட்டம், திருச்சி என்றும் தெரிவித்தார். அவரது அறையை சோதனை செய்ய அவரது மேஜையின் வலது மற்றும் இடது பக்கத்தில் கோப்புகள் ஆங்காங்கே இருந்தன. வலது மற்றும் இடதுபுற டிராயரை சோதனை செய்ய தபால்கள் மட்டும் இருந்தன, பணம் எதுவும் இல்லை. வேறு பணம் எதுவும் உள்ளதா என்று மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரமேஷ் அவர்கள் செயற்பொறியாளரிடம் கேட்க, அவர் தன்னிடமிருந்த பர்சிலிருந்து ரூ.17,500/--ஐ(2000x6,

11x500) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க அது தன் சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்பணம் ரூ.17,500/ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரிடம் அவரது குடியிருப்பு பற்றி கேட்க, அவர் No.27, Raja Colony, 1st Main Road, Trichy விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், வீட்டில் உள்ள லஞ்சப்பணம் பற்றி கேட்க, வீட்டிற்கு சென்றால்தான் எவ்வளவு பணம் உள்ளது என்பதை உறுதியாக கூறமுடியும் என செயற்பொறியாளர் திரு.மணிமோகன் தெரிவித்தார். மேலும், AEE திரு.ஜெயராமன் குறித்து கேட்க அவர் Site Inspection சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், திரு.A.சக்திவேல் தொடர்பான ஆவணங்கள் பற்றி செயற்பொறியாளரிடம் கேட்க 1)செயற்பொறியாளர் அலுவலகம் நீர்வளத்துறை, ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி அலுவலக மே.கு.கடித எண்.967/வ2/கோ./2022, நாள்.07.06.2022 A.சக்திவேல், த/பெ.அய்யாவு என்பவரது 10.05.2022 நாளிட்ட புகார் மனுவுடன் அடங்கியது–14 பக்ககங்கள், எடுத்து ஆஜர் செய்தார், மேற்படி ஆவணம் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது, மேலும் உதவி பொறியாளர் திரு.கந்தசாமி, குடியிருப்பிலும், செயற்பொறியாளர் குடியிருப்பிலும் பணம் மற்றும் ஆவணங்கள் கிடைக்ககூடும் என்ற அடிப்படையில் சம்மந்தப்பட்ட ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கு முன்தகவல் 18.00 மணிக்கு தெரிவித்து அனுப்பப்பட்டது. மேற்படி இடங்களில் மேற்படி அதிகாரிகள் வாங்கிய கையூட்டு பணம் இருக்கும் என்ற சந்தேகத்தின் பேரில் வீடு சோதனை செய்ய செல்வதால் மகஜர் 18.00 மணிக்கு தற்காலிகமாக முடிக்கப்பட்டது.

04.07.2022 WRD, EE திருச்சி அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) தொடர்ச்சி....திருச்சி, நீர்வள ஆதாரத்துறை, ஆற்றுபாதுகாப்பு கோட்டம், செயற்பொறியாளர் அலுவலகத்தில் 04.07.2022 அன்று பிற்பகல் 13.15 மணி முதல் 18.00 மணி வரை நடந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக, அலுவலர்கள் கையூட்டு பணம் வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கு முன்தகவல் சமர்ப்பித்துவிட்டு (1)திரு.R.மணிமோகன், செயற்பொறியாளர் RC Division, நீர்வளத்துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி அவர்களின் இருப்பிடமான எண்.27, ராஜா காலனி, முதல் மெயின்ரோடு, கண்டோண்மென்ட், திருச்சி அடைந்து. மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரமேஷ் மற்றும் திரு.தங்கராஜ், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு மற்றும் திருச்சி மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் முன்னிலையில் மாலை 18.45 மணிக்கு வீடு சோதனை தொடங்கப்பட்டது.

மேற்படி வீடானது திரு.மணிமோகன் என்பவரின் மனைவி திருமதி.கவிதா என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி வீடானது திருச்சி, கண்டோண்மென்ட், ராஜா காலனி செல்லும் பிரதான சாலையில் மேற்கு நோக்கிய வாசல் கொண்ட கான்கீரிட் வீடு ஆகும். மேற்படி வீட்டின் மின் இணைப்பு எண்.06–211–015–1191 ஆகும். மேற்படி வீட்டில் அமைந்துள்ள அறைகளும், அந்த அறையில் உள்ள வீட்டு உபயோக பொருட்கள் பார்வையிட்ட விபரம் கீழ்கண்டவாறு.

கூஷ வீட்டில் பெரிய படுக்கை அறையில் உள்ள Wardrobe-இருந்த தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | எடை(தோராயமாக) கிராமில் |
|---|---|---|---|
| 1. | முறுக்கு செயின் | 1 | 96 கிராம் |
| 2. | டாலர் செயின் | 2 | 48 கிராம் |
| 3. | வளையல் | 4 ஜோடி | 80 கிராம் |
| 4. | கோல்டு காயின் | 3 | 12 கிராம் |
| 5. | வெள்ளி குத்து விளக்கு | 2 | 600 கிராம் |

மேலும், மேற்படி அறையின் அதே Wardrobe இடது டிராயரிலிருந்து ரொக்கம் ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) (200x400) ரொக்கப்பணம் இருந்தது. அப்பணம் பற்றி கேட்க, அது தனது சொந்த பணம் மற்றும் தனது மனைவியின் சேமிப்பு பணம் என்று சொன்னதால், மேற்படி பணம் ரூ.80,000/–ம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி Wardrobe வலது டிராயிரிலிருந்து ரொக்கம் ரூ.4,00,000/– (ரூபாய் 4 லட்சம் மட்டும்) (500x800) ரொக்கப் பணம் இருந்தது. அப்பணம்பற்றி திரு.மணிமோகனிடம் கேட்க அவர் சரியான முகாந்திரம் அளிக்காததால் மேற்படி பணம் கையூட்டு பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்பதின் பேரில் மேற்படி பணம் ரூ.4,00,000/– மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வீட்டின் அறைகளில் இருந்த தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்கள் பார்வையிடப்பட்டு மீண்டும் திரு.மணிமோகன் வசமே சாட்சிகள் முன்னிலையில் திரும்ப நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டன. மேலும் திரு.கந்தசாமி, உதவி பொறியாளரின் இருப்பிடம் உள்ள திருவானைக்கோவில் சென்று வீடு சோதனை செய்யவேண்டியுள்ளதால், சோதனை மகஜர் இரவு 19.30 மணிக்கு தற்காலிகமாக முடிக்கப்பட்டது.

04.07.2022 WRD, EE திருச்சி அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) தொடர்ச்சி.... திருச்சி, நீர்வள ஆதாரத்துறை, ஆற்றுபாதுகாப்பு கோட்டம்,

செயற்பொறியாளர் அலுவலகத்தில் 04.07.2022 அன்று பிற்பகல் 13.15 மணி முதல் 18.00 மணி வரை நடந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக, அலுவலர்கள் கையூட்டு பணம் வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கு முன்தகவல் சமர்ப்பித்துவிட்டு மாலை 18.45 மணி முதல் இரவு 19.30 மணி வரை திரு.R.மணிமோகன், செயற்பொறியாளர் இருப்பிடமான எண்.27, ராஜா காலனி, முதல் மெயின்ரோடு, கண்டோண்மெண்ட், திருச்சி என்பவரின் வீடுசோதனை முடித்து, பின்பு AE திரு.கந்தசாமி என்பவரின் இருப்பிடமான எண்.D/E2, சங்கர் அப்பார்ட்ஸ், லஷ்மி வாசம்–2, கல்லனை ரோடு, திருவானைக்கோவில், ஸ்ரீரங்கம், திருச்சி அடைந்து, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரமேஷ் மற்றும் திரு.தங்கராஜ், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு மற்றும் திருச்சி மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் முன்னிலையில் மாலை 20.00 மணிக்கு வீடு சோதனை தொடங்கப்பட்டது.

மேற்படி வீடானது திரு.கந்தசாமி என்பவரின் மனைவி திருமதி.சாந்தி என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி வீடானது திருச்சி, திருவானைக்கோவில், பழைய கல்லனை ரோட்டின் பிரதான சாலையில் வடக்கு பார்த்து அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பின் D பிளாக்கில், முதல் தளத்தில் கிழக்கு நோக்கிய வாசல் கொண்ட E2 என்ற வீடு ஆகும். மேற்படி வீட்டின் மின் இணைப்பு எண்.06–262–002–1810 ஆகும். மேற்படி வீட்டில் அமைந்துள்ள அறைகளும், அந்த அறையில் உள்ள வீட்டு உபயோக பொருட்கள் பார்வையிட்ட விபரம் கீழ்கண்டவாறு.

சஷ வீட்டில் பெரிய படுக்கை அறையில் உள்ள இரும்பு பீரோவில் இருந்த தங்க நகைகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | எடை(தோராயமாக) கிராமில் |
|---|---|---|---|
| 1. | காசு மாலை | 1 | 56 கிராம் |
| 2. | மாங்காய் மாலை | 1 | 48 கிராம் |
| 3. | நெக்லஸ் | 3 | 40 கிராம் |
| 4. | டாலர் செயின் | 3 | 56 கிராம் |
| 5. | கை செயின் | 1 | 16 கிராம் |
| 6. | மைனர் செயின் | 4 | 112 கிராம் |
| 7. | காயின் | 1 | 25 கிராம் |
| 8. | வளையல் | 4 ஜோடி | 120 கிராம் |
| 9. | மோதிரம் | 10 | 40 கிராம் |
| 10. | தோடு | 6 ஜோடி | 32 கிராம் |

மேலும், மேற்படி அறையின் அதே இரும்பு பீரோவின் இடது டிராயரிலிருந்து ரொக்கம் ரூ.4,500/– (ரூபாய் நான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்) (100x45) ரொக்கப்பணம் இருந்தது. அப்பணம் பற்றி கேட்க, அது தனது மனைவியின் சேமிப்பு பணம் என்று சொன்னதால், மேற்படி பணம் ரூ.4,500/–ம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வீட்டின் அறைகளில் இருந்த தங்க நகைகள் பார்வையிடப்பட்டு மீண்டும் திரு.கந்தசாமி, உதவி பொறியாளர் வசம் சாட்சிகள் முன்னிலையில் திரும்ப நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டன. திடீர் சோதனை மகஜர் இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி புகார் கடிதத்துடன் கூடிய திடீர் சோதனை செயல்முறையை (மகஜர்) பெற்று திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2022 u/s 7, 7(A) of the PC Act 1988 (as amended in 2018)ன்படி இன்று (04.07.2022) 23.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திரு.ரமேஷ், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியரக வளாகம், திருச்சி அவர்கள் கொடுத்த 04.07.2022 தேதியிட்ட புகார் கடிதம் மற்றும் 04.07.2022 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்), திரு.A.சக்திவேல், த/பெ.அய்யாவு, குறிச்சி டாக்டர் அம்பேத்கார் நகர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம், எதிரிகள் திரு.R.மணிமோகன் மற்றும் திரு.SVK.கந்தசாமி ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையில் இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

G. [signature] 4/7/2022
Inspector of Police
VSAC
Trichy.